Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 160

வெள்ளிக்கிழமை 05 மே 2023

சித்திரை 22 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## நடமாடினால் உடன் கைது

### தையிட்டியில் பொலிஸார் மிரட்டல்

யாழ்ப்பாணம், மே 5
தையிட்டி திஸ்ஸ விகாரைப் பகுதியில் நடமாடித் திரிந்தால் உடன் கைதுசெய்வோம் என்று »11

# அமைதியான முறையில் போராடத் தடையில்லை!

## மல்லாகம் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

யாழ்ப்பாணம், மே 5
தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அண்மையில் உள்ள காணியில் இருந்து அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபடலாம். அமைதியான முறையில் போராடுவதற்கு எந்தத் தடையுமில்லை என்று மல்லாகம் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். »11

## இறுதி நாள் போராட்டத்துக்காக தையிட்டிக்கு அணிதிரளுங்கள்!

### தமிழ்த் தேசியப் பேரவை அறைகூவல்

யாழ்ப்பாணம், மே 5
தையிட்டியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து, சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்துக்கு எதிராகவும், தனியாருடைய காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று வலியுறுத்தியும் இன்று பெருமெடுப்பில் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது »11

## தையிட்டி விகாரை பொசனன்று திறப்பு

யாழ்ப்பாணம், மே 5
தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை பொசனன்று திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
தையிட்டியில் பொதுமக்களின் காணியில் சட்டவிரோதமாக திஸ்ஸ விகாரை இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விகாரைக்கு கலசம் அண்மையில் வைக்கப்பட்டது. »11

### தையிட்டி போராட்டக்களத்தில்

## உணவுகள், நீராகாரங்களை தூக்கியெறிந்து அநாகரிகம்



யாழ்ப்பாணம், மே 5
தையிட்டி போராட்டக் களத்துக்கு நேற்றுச்சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வழங்கிய உணவுகளும் நீராகாரங்களும் தூக்கி வீசப்பட்டன. இந்த அநாகரிகச் செயலால் அதிருப்தியடைந்த மக்கள் போராட்டத்தில் »11

## தையிட்டி விவகாரம்; நீதிமன்றை நாடுங்கள்

### பொலிஸாருக்கு ஆளுநர் அறிவுரை



யாழ்ப்பாணம், மே 5
தையிட்டியில் முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடர்பாக நீதிமன்றத்தை நாடுமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ். மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு »11

### பொலிஸ் இராணுவ அடக்குமுறை

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இருந்து தமிழ் எம்.பி.க்கள் நேற்று வெளிநடப்பு

யாழ்ப்பாணம், மே 5
தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதற்காக போராட்டம் நடத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்டோரை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து முற்றுகையிட்டுள்ளமையைக் கண்டித்தும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலிருந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று வெளிநடப்புச் »11

## படையினர் வழிபாட்டுக்கு விகாரை அமைக்கலாமாம்!

### கூறுகிறார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மே 5
படையினர் தங்கியுள்ள இடங்களில் அவர்களின் வழிபாட்டுக்காக விகாரைகளை அமைக்கமுடியும் »11

## விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நேற்று ஆரம்பம்!

கொழும்பு, மே 5
2022 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப்பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நேற்று வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழக »11

## மூச்செடுக்க சிரமப்பட்ட கர்ப்பிணிப் பெண் பலி!

மன்னார், மே 5
மன்னாரில் மூச்செடுக்கச் சிரமப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணொருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். அவருக்கு வயது 26. குறித்த பெண் கடந்த மூச்செடுக்க »11

## சீரணி நாகபூஷணி இன்று தேரேறுகிறாள்

யாழ்ப்பாணம், மே 5
சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று இடம்பெறவுள்ளது. (அ-ம)

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்தத் தேர்த்திரு விழாவை முன்னிட்ட சிறப்பிதழ் பக்கம் – 06,07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் திட்டத்தால்

# பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் விலகல்!

## வடக்கு கல்விப் பணிப்பாளர் தகவல்

**யாழ்ப்பாணம், மே 5**

**அரச பணியாளர்கள் 5 வருடம் சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவித்தமையால் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் வெளிநாடுகளுக்கு புலம்பெயருகின்றனர் என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோண் குயின்ரஸ் தெரிவித்தார்.**

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. பாடசாலை இடைவிலகல் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்திலேயே கல்விப் பணிப்பாளர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

5ஆண்டுகள் சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ளும் அரச பணியாளர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். அவர்கள் தங்களது பிள்ளைகளையும் அழைத்துச் செல்கின்றனர். இதன் காரணமாக பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை இங்கு குறைந்து வருகின்றது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மாத்திரம் கடந்த மாதம் 7 பிள்ளைகள் இவ்வாறு விலகியுள்ளனர்' என்று குறிப்பிட்டார். (ம-ஒ,5)

வடமாகாணத்தில்

# மூன்று இடங்களில் முதலீட்டு வலயம்!

யாழ்ப்பாணம், மே 5

வடக்கு மாகாணத்தில் மூன்று இடங்கள் முதலீட்டு வலயம் அமைப்பதற்கு ஏதுவான இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதற்குரிய அமைச்சரவைப் பத்திரங்கள் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போது இலங்கை முதலீட்டுச் சபையின் பிரதிநிதியால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.'யாழ்ப்பாண மாவட்டத்தில் காங்கேசன்துறையில் சிமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளோம். அங்கே முதலீட்டு வலயம் அமைக்க உத்தேசித்துள்ளோம். கிளிநொச்சியில் இரசாயனத் தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தையும் மாங்குளத்தில் 400 ஏக்கரிலும் முதலீட்டு வலயம் அமைக்க உத்தேசித்துள்ளோம்' என்று முதலீட்டுச் சபை பிரதிநிதி குறிப்பிட்டார்.

ஒ-5)

தொலைபேசியில்

# அமைச்சர் டக்ளஸுக்கு மிரட்டல் அழைப்புகளாம்

யாழ்ப்பாணம், மே 5

மிருகங்களை ஒழுங்காகக் கையாளுமாறு தனக்கு மிரட்டல் அழைப்பு ஒன்று காலையில் விடுக்கப்பட்டது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அதன் ஊடாக விபத்துக்கள், உயிரிழப்புக்கள் என்பன ஏற்படுகின்றன எனவும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சார்பில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த இனப்பெருக்க கட்டுப்பாட்டுச் சிகிச்சை முன்னெடுக்கவேண்டும் என்று கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக் களத்தால் கூறப்பட்டது. இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிராணிகள் மீது மென்மையைக் கடைப்பிடிக்குமாறு மிரட்டல் தொலைபேசி அழைப்பு காலை எனக்கு விடுக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

இதேவேளை- நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திடமிருந்து தற்போது சுகாதாரத் திணைக்களத்துக்கு கொழும்பு சுகாதார அமைச்சால் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனை மீளவும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். நாடு முழுவதுமான நடைமுறை என்று கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவிக்க, வடக்கில் நாம் இதனைச் செய்வோம். இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசுகின்றேன் என்று அவர் குறிப்பிட்டார்.

(ஒ-5)

யாழ். மாவட்டத்தில்

# ஒரு கடலட்டைப் பண்ணைகூட வெளிமாவட்டத்தவருடையதல்ல

## நெக்டா தகவல்

யாழ்ப்பாணம், மே 5

யாழ். மாவட்டத்தில் 264 கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் ஒன்றுகூட வெளிமாவட்டத்தவர்களுடையது இல்லை என்று நெக்டா நிறுவன அதிகாரி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றபோது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடலட்டைப்பண்ணைகள் தொடர்பில் புரளி கிளப்புகின்றார். சீனர்களுக்கு கொடுக்கப்படுவதாகச் சொல்கின்றனர். கோயபல்ஸ் போன்று பொய்யை திரும்பத்திரும்பச் சொன்னால் உண்மையாகிவிடும் என்று நினைத்து அவ்வாறு சொல்கின்றனர். எனவே கடலட்டைப் பண்ணை தொடர்பில் தெளிவுபடுத்துமாறு நெக்டா அதிகாரியை டக்ளஸ் கேட்டுக்கொண்டார்.'யாழ். மாவட்டத்தில் 264 கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 103 கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி வழங்குவதற்கான ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. அனுமதி வழங்குவதற்குத் தொடர்புடைய அனைத்துத் திணைக்களங்களும் நேரில் சென்று பார்வையிட்டே அனுமதியை வழங்குகின்றன. யாழ். மாவட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ள ஒருவர்கூட வெளிமாவட்டத்தவர்கள் இல்லை.

கடலட்டை இனப்பெருக்க நிலையம் ஒன்று அரியாலையில் இயங்கி வருகின்றது. அது வெளியிடத்தைச் சேர்ந்தவருடையது. கடலட்டைப் பண்ணைகள் அனைத்தும் இங்குள்ள கடற்றொழில் சங்கங்களின் அனுமதியுடன்தான் வழங்கப்படுகின்றன. பிரச்சினைக்குரியதாகக் கூறப்படும் கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் ஆராய்ந்து அதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம்' என்று தெரிவித்தார். (ஒ-5)

# வடக்கில் பல அதிகாரிகளுக்கு ஜூலை முதல் இடமாற்றங்கள்!

யாழ்ப்பாணம், மே 5

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் பிரதேச செயலர்கள், மேலதிக மாவட்டச் செயலர்கள் உட்பட பலருக்கு எதிர்வரும் ஜுலை மாதம் 10ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் வழங்கப்பட்டுள்ள இடமாற்றப்பட்டியலின்படி, சங்கானை பிரதேச செயலர் திருமதி பொ.பிரேமினி கிழக்கு மாகாணசபைக்கும், கிழக்கு மாகாணசபையில் பணியாற்றும் திருமதி கே.உதயகுமார் சங்கானை பிரதேச செயலராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.சிறிமோகன், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலராகவும், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சு.முரளிதரன் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சபையில் பணியாற்றும் திருமதி ந.இன்பராஜ் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பணியாற்றும் ந.திருலிங்கநாதன் வடக்கு மாகாணசபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராகப் பணியாற்றும் சி.கிருஷ்நேந்திரன் வடக்கு மாகாண சபைக்கும், யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நகரப் பிரதேச செயலர் பி.தனேஸ்வரன் ஊர்காவற்றுறை பிரதேச செயலராகவும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எஸ்.மஞ்சுளாதேவி திருகோணமலை நகரப் பிரதேச செயலராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பி.ஜெயகரன் வடக்கு மாகாணசபைக்கும், வடக்கு மாகாண சபையில் பணியாற்றும் பற்றிக் டிறைஞன், கரைச்சிப் பிரதேச செயலராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர். (ஒ-5)

# செழிப்பான பாதையில் இலங்கை மீளச் செல்லும்

## சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை

**கொழும்பு, மே 5**
**இலங்கையைச் செழிப்பான பாதையில் மீண்டும் கொண்டு செல்லமுடியும் என சர்வதேச நாணயநிதியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.**

ஆசிய பசுபிக்கின் பொருளாதார நிலை தொடர்பாக ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் இயக்குநர் கிருஸ்ணா ஶ்ரீனிவாசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை ஒரு முக்கியமான பிரச்சினை உள்ள நாடு. சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியை அடிப்படையாகக் கொண்ட திட்டம், நுண் பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் பணவீக்கத்தைக் குறைத்தல் போன்றவற்றை வலியுறுத்துகின்றது.

நிதி ஒருங்கிணைப்பு வருவாய் ஒருங்கிணைப்பை அடிப்படையாகக் கொண்டது. வருவாய் திரட்டல், வரி வசூலிப்பு போன்றவற்றில் இலங்கை மிகவும் பின்னிலையில் உள்ளமைக்கு இதுவும் ஒரு காரணம். கொரோனா காலத்தில் அவர்கள் முன்னெடுத்த கொள்கைகளில் உள்ள தவறுகளே இதற்குப் பிரதான காரணம். அவர்கள் வரிச் சலுகையை வழங்கினார்கள்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிதி ஆதரவுத் திட்டம் என்பது வருவாய் அடிப்படையிலான ஒருங்கிணைப்பு ஆகும். இது பொருளாதாரத்துக்கு ஸ்திரத் தன்மையை வழங்குகின்றது.

இலங்கையில் மிகவும் உயர் நிலைக்குச் சென்ற பணவீக்கத்தை கட்டுப்படுத்த சர்வதேச நாணய நிதியம் விரும்புகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் ஆட்சி மற்றும் ஊழல் விவகாரங்களுக்கும் தீர்வைக் காணமுயல்கின்றது.

ஆட்சி மற்றும் ஊழல் விவகாரம் தொடர்பாக ஆழமான கண்டறிதலை மேற்கொண்ட முதல் நாடு இலங்கை. இது இலங்கை வறியவர்கள் மற்றும் நலிந்தவர்களுக்கு எவ்வாறு உதவவேண்டும் என்பதை மையப்படுத்திய திட்டமாகும்.

தனியார் கடன் வழங்குநர்கள் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களை உள்ளடக்கிய கடன் வழங்குநர்களுடன் கடன் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான நல்லெண்ண முயற்சிகளை இலங்கை அடுத்த கட்டமாக மேற்கொள்ள வேண்டும். பொருளாதார வளர்ச்சியை பொறுத்தவரை 2022ஆம் ஆண்டு 8.7 வீத வீழ்ச்சி காணப்பட்டது 2023ஆம் ஆண்டு சிறிய மீட்சி காணப்படும்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் கடன்களைப் பேண்தகு தன்மை கொண்டமையாக மாற்றலாம்.

பணவீக்கத்தை இலங்கை குறைக்கவேண்டும். அது வறியவர்கள் மீது சுமையை செலுத்துகின்றது வறியவர்கள் நலிந்தவர்களை காயப்படுத்துகின்றது-என்றார். (எ-இ)

# தேசிய அரசு அமைப்பது ரணிலின் திட்டம் அல்ல!

## ஐ.தே.க. தெரிவிப்பு



கொழும்பு, மே 5

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசு பற்றிப் பேசவே இல்லை. இது திரித்து கூறப்படும் பொய்யான செய்தி.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேசிய அரசு உருவாக்கம் பற்றி இப்போது பேசப்படுகின்றது. நாங்கள் அறிந்த வகையில் ஜனாதிபதி தேசிய அரசு பற்றிப் பேசவே இல்லை.

கூட்டத்தில் கலந்துகொண்ட ஐ.தே.க.வின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "முழு நாடாளுமன்றமும் அரசாகச் செயற்படுகின்றது" என்றே தெரிவித்தார்.

தேசிய அரசு பற்றிப் பேசியது எதிர்க்கட்சியினர்தான். அவர்களே அது பற்றிப் பேசிவிட்டு இப்போது அரசுடன் இணையப்போவதில்லை என்று சொல்கின்றார்கள். அவர்களுக்குத்தான் தேசிய அரசின் தேவைப்பாடு உள்ளது.- என்றார். (ச-22)

# கட்சியில் பஸில் வெற்றுவேட்டு!

## பெரமுனவின் செயலர் தெரிவிப்பு



கொழும்பு. மே 5

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் பஸில் ராஜபக்சவுக்கு எந்தப் பதவியும் இல்லை. அவர் கட்சியின் ஸ்தாபகர் மட்டுமே.

இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எமது கட்சி ஒருபோதும் உத்தியோகபூர்வமாக அவர் கட்சியின் தேசிய அமைப்பாளர் என்று அறிவித்ததில்லை. அவரை நாங்கள் கட்சியின் ஸ்தாபகர் என்றே அறிமுகப்படுத்தி வருகின்றோம்.

மொட்டுக் கட்சியில் பஸிலுக்கு எந்தப் பதவியும் இல்லை. அவரை மொட்டுவின் தேசிய அமைப்பாளர் என்று ஊடகங்கள் கூறினாலும் அப்படியான பதவி அவருக்கு வழங்கப்படவில்லை - என்றார். (ச-22)




**எல்லாம் இப்ப ரெடிமேட்டா மாறேக்க செத்த வீடுகளும் மாறாமல் இருக்குமோ? நிறைய இடங்களில இப்ப எல்லாமே ரெடிமேட்தான். குறிப்பா சைவச் செத்தவீடுகளில கிரியை செய்யிறதும் ரெடிமேட்டா மாறிட்டுது. ஐயருக்கு கோல் பண்ணினால், அவர் தனக்கு எப்ப ரைம் எண்டு சொல்லுவார். சொன்ன நேரத்துக்கு ஐயர் தன்ர வாகனத்தில வந்து இறங்கினால், பிறகு எல்லாம் பம்பரம் மாதிரி காரியம் பரபரவெண்டு நடக்கும். கும்பம், தேங்காய், கற்பூரம், பந்தம், மஞ்சள் எண்டு ஒண்டும் வீட்டுக்காரர் வாங்கத் தேவையில்லை. எல்லாமே ஐயர் கொண்டந்திடுவார். கிரியை எல்லாம் முடிய ஐயர் காசை வாங்கிக் கொண்டு அடுத்த செத்தவீட்டுக்கு பறந்திடுவார்.**

**இதில என்ன பிழை இருக்கு. நேரமும் மிச்சம், அலைச்சலும் மிச்சம் தானே? எண்டு சிலர் யோசிப்பியள். இப்பத்தைய அவசர காலத்தில இப்பிடி ரெடிமெட் வேலையள்தான் சரி எண்டும் நினைப்பியள். பழையன கழிதலும் புதியன புகுதலும் அவசியம்தான். எண்டாலும் சில நம்பிக்கைகள், சமயத்தோட தொடர்பான விசயங்கள் கண்ணுக்கு முன்னால அடிபடேக்க எல்லாருக்கும் ஒருக்கா நெஞ்சு பதறத்தான் செய்யும். முக்கியமா தேங்காய். அதை பொதுவா பிள்ளையாரின்ர மறு உருவமாத்தான் சைவ ஆக்கள் பாக்கிறவை. ஷேப்பும் பிள்ளையார் மாதிரித்தானே. அதால நல்லது. கெட்டதுக்கெல்லாம் தேங்காய்க்கு முதலிடம். ஆனால் இந்த ரெடிமெட் செத்தவீட்டுக் கிரியைகளில நாலைஞ்சு செத்தவீடுகளுக்கு ஒரே தேங்காயளையும், செம்புகளையும் வைச்சுத்தான் சரிக்கட்டுகினம்.**

**செத்தவீடுகளில பாவிச்ச பொருள்களை துடக்கு எண்டு எங்கட ஆக்கள் பிறகு பாவிக்கிறேலை. ஆனால் இந்த ரெடிமெட் செத்தவீடுகளில அப்பிடியெல்லாம் பாக்கிறேலை. இன்னொரு செத்தவீட்டில பாவிச்ச கும்பம், நூல், தர்ப்பை, மஞ்சள் எண்டு எல்லாத்தையும் திரும்ப பாவிக்கினம். ரெடிமேட்டா மாறலாம்தான், ஆனால் கொஞ்சமெண்டாலும் சுத்தம், நம்பிக்கை இதுகளையும் மதிச்சால் நல்லம்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. ஒருங்கிணைப்புக் கூட்டம் ஊடகவியலாளர்களுக்குத் தடை

வவுனியா, மே 5

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப் புக் கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டு கூட்டம் நிறைவுற்ற தும் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி தகவல் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டம் இணைத் தலை வர்களான வடக்கு மாகாண ஆளு நர் ஜீவன் தியாகராஜா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீ பன் தலைமையில் நேற்றுமுன்தி னம் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் செய்திசேகரிப் பதற்கு ஊடகவியலாளர்களால் அனுமதி கோரப்பட்டது. ஆனால் அதற்கான அனுமதியை மறுத்து மாறாக கூட்டம் நிறைவுபெற்றதும் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி தகவல்கள் அறியத்தரப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, கூட்டம் நடைபெறும் மண்டபத்துக்கு வெளியில் ஊடக வியலாளர் இருந்தமையை அவ தானித்து மண்டபத்தின் வாயில் கதவு பூட்டப்பட்டு ஒலிபெருக்கி சத்தமும் குறைக்கப்பட்டு கூட்டம் நடத்தப்பட்டது.

இதுதொடர்பில் கூட்டம் நிறைவு பெற்ற பின்னர் இணைத்தலைவ ரான வடக்கு மாகாண ஆளுநரிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போது, "இந்தவிடயம் குறித்து எது வும் எனக்குத் தெரியாது. அவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டிருப்பின் அதற்கு மனம் வருந்துகிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ச-110)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். உடல் ஆரோக்கியம் மேம் படும். நண்பர்கள் உதவி கேட்டு வரு வார்கள். சங்கடங்கள் ஏற் பட்டு நீங்கும்.

**மிதுனம்:** திடீர் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமா ளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைக ளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஆட்கொள்ளும். வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். உடல்நலனில் கவனம் தேவை.

**சிம்மம்:** எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு ஒத்து ழைப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கி யத்தில் கவனம் தேவை. பிள் ளைகளால் பெருமை உண்டாகும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும், திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளை அல்லது பெண்ணின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். ஆனால், தாயாரின் உடல் ஆரோக்கி யத்தில் கூடுதல் கவனம் செலுத்த வும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெ டுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. செலவுகள் அதிகரிப்பதால் கடன் வாங்க நேரிடும்.

**மகரம்:** முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** திய முயற்சிகளை தொடங்கு வது சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மகிழ்ச்சியான செய் தியை பகிர்ந்து கொள்வர்.

**மீனம்:** எதிலும் பொறுமையுடன் செயற் படவேண்டிய நாள். தேவை களைப் பூர்த்தி செய்யும் வகையில் அலைச்சல் உண்டாகும். அனுகூலம் ஏற்படும்

# முதியவரை தாக்கி பணம் கொள்ளை

யாழ்ப்பாணம், மே 5

முதியவரைத் தாக்கி 3 ஆயிரம் ரூபா பணத்தை இளைஞர் குழுவொன்று கொள்ளையடித்துச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் அச்சுவேலி பத்தமேனி சந்திப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வீதியில் மதுபோதையில் நின்றிருந்த இளைஞர்கள் முதியவரைத் தாக்கிவிட்டு அவரிடமிருந்த 3 ஆயிரம் ரூபாவை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த முதியவர் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளார். சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். (ச-23)

# விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, மே 5

கைதடியில் நேற் றுமுன்தினம் இரவு நடந்த வாகன விபத் தில் பளையைச் சேர்ந்த இருவர் காயமடைந்துள் ளனர். இவர்கள் சாவகச்சேரி மருத்து வமனையில் சேர்க் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனைக்கு மாற்றப் பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பளை நோக்கி இவர்கள் மோட்டார் சைக் கிளில் பயணித்த போது எதிரே வந்த வாகனம் இவர்களை மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று கூறப்படுகின்றது.

அரசர்கேணி மற்றும் வேம் பொடுகேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த 24 மற்றும் 33 வயதுடைய இரு வரே விபத்தில் காய மடைந்துள்ளனர். (எ-9)


# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி அன்னம்மா

விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு கட்டைப்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அன்னம்மா அவர்கள் நேற்று (04.05.2023) வியாழக் கிழமை காலமானார்.

அமரர் சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும், சாந்தம்மா தேவி, சற்குணதேவி, அமரர் தர்மகுலசிங்கம், ஜெயராஜ சிங்கம், சறோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரசிங்கம், இராஜவரோதயம், சுகந்தினி, சிவறஜனி, பரமசிவம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கார்த்திகா, சிவகங்கா, கிரிதரன், தாட்சாயினி, நிகிதா, நிக்ஷன், நில்க்ஷனா, சங்கீதா, பிரமில்லன், அஜானன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
மகன் - ஜெயராஜசிங்கம்
077 3545 313

(CS 24786) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 06 . 1942



மறைவு 04 . 05 . 2023

## Dr.சின்னத்துரை கந்தசாமி

(ஓய்வுநிலை வைத்தியர் யாழ். போதனா வைத்தியசாலை, நியூ யாழ். வைத்தியசாலை, பிலிப் நேர்சிங் கோம்)

குரும்பைசிட்டி, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், திருச்செல்வம் வீதி, கோண்டா விலை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.சின்னத்துரை கந்தசாமி அவர்கள் நேற்று (04.05.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குரும்பைசிட்டியைச் சேர்ந்த சின்னத்துரை அன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சாவகச்சேரியை சேர்ந்த சங்கரப்பிள்ளை பாக்கியம் தம்பதியரின் மருமகனும், சிவமலரின் அருமைக் கணவரும், காலஞ் சென்றவர்களான செல்லம்மா, சரஸ்வதி, தருமலிங்கம், கமலாதேவி ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், நவரத்தினம், மங்கையர்கரசி, விக்னேஸ்வரராஜா, நடராசா, நாகராஜா, ஆறுமுகம்பிள்ளை மற்றும் சிவயோகம், தங்கரத்தினம், செல்வம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக் காக கட்டையாலடி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ராஜா பிளாஷா பின்புறம்
24/1, திருச்செல்வம் வீதி,
கோண்டாவில்.

தகவல்: திருமதி கந்தசாமி சிவமலர்
(மனைவி)
021 222 5836
077 169 8073

(CS 24785) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கார்போர்ட் வீரர்களே, களத்துக்கும் வாருங்கள்!

இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் எவரும் எந்தவோர் ஆலயத்தையும் அமைக்கமுடியும், வழிபடவும்முடியும். அதை யாரும் கேள்விக்கு உட்படுத்தமுடியாது. ஆனால் அந்த ஆலயம் வழிபாட்டு நோக்குடன் அமைக்கப்படாமல் ஆக்கிரமிப்புக்கான அடையாளமாக நிறுவப்பட்டால் அதை எதிர்த்துப்போராடவேண்டும். இலங்கையில் பௌத்தம் என்ற மதத்தை ஏனைய மதங்களை – இனங்களை அடக்கி ஒடுக்கும் கருவியாகவே ஆட்சியாளர்கள் பயன்படுத்துகின்றனர். தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரை தற்போது பேசுபொருளாகியுள்ளது. அந்த விகாரை அமைந்துள்ள இடத்தைச் சூழ அதனை வழிபடும் பௌத்தர்கள் இல்லை. அப்படியானால் எதற்காக அங்கு விகாரையை அமைத்துள்ளார்கள்? அங்குள்ள சிங்கள – பௌத்த இராணுவத்தினருக்காகவா? அப்படியென்றால் ஒன்றில் அவர்கள் அங்கே நிரந்தரமாகத் தங்கப்போகின்றார்களா? அல்லது அவர்களது குடும்பங்களையும் அங்கு குடியேற்றப்போகின்றார்களா? இவை இரண்டுமே ஆக்கிரமிப்புத்தான். இதை எதிர்த்துப்போராடத்தான்வேண்டும். போராடாமல் எதுவும் நடக்கப்போவதில்லை.

அந்த விகாரைக்கு அடிக்கல்நட்டு கட்டும் வரையில் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் பேசாமடந்தைகளாக இருந்தார்கள். இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி கொரோனா – பொருளாதார நெருக்கடி காலங்களுக்குள் கமுக்கமாக கட்டி முடித்துள்ளது சிங்கள – பௌத்த சிறிலங்கா இராணுவம். தமிழ் மக்களின் அமைதி அவர்களுக்கு அதனைக் கட்டி முடிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்திருந்தது. இப்போதும் அதை எதிர்க்காவிட்டால் அவர்கள் இதனை விஸ்தரித்தே தீருவார்கள். அதற்கு ஏற்றாற்போல் கந்தரோடையில் விகாரை அமைப்பதற்கு பிக்கு விண்ணப்பித்தும் விட்டார்.


தையிட்டி விகாரையை எதிர்த்து தமிழ்த் தேசியப் பேரவை தொடர்போராட்டத்தை ஆரம்பித்தது. ஆரம்பித்தபோது முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். எமது மக்கள் தங்கள் வீட்டுக்கு – காணிக்கு பாதிப்பு வராதவரையில் எதைப்பற்றியும் கவலைப்படமாட்டார்கள். அதேபோன்று இன்று தையிட்டியில் விகாரை அமைக்கின்றார்கள். நாளை சுன்னாகத்தில் அமைப்பார்கள். நாளை மறுநாள் நல்லூரிலும் அமைப்பார்கள். அப்போது போராட முயலும்போது எல்லாமே முடிந்துபோயிருக்கும். எனவே எங்கள் வீட்டுப் படலைக்கு பிரச்சினை வந்து கதவைத் தட்டும் வரையில் பார்த்திருக்காமல் எமது தேசத்தின் எல்லையில் ஆக்கிரமிப்பு நடக்கும்போது போராடவேண்டும். மக்கள் அணிதிரளவேண்டும் என்று அறைகூவல் விடுத்திருந்தார். அது உண்மைதான். மக்களின் பங்கேற்பு – ஆதரவு இல்லாமல் எந்தவொரு போராட்டமும் வெற்றியடையாது.

ஒரு சில டசின்கணக்கானோர் போராடும்போது அவர்களை அடக்கி ஒடுக்கலாம்; மிரட்டலாம். அதுவே ஆயிரம், பத்தாயிரம், லட்சம் என்று அணிதிரளும்போது ஆட்சியாளர்கள் அடங்கிப்போவதைத் தவிர அவர்களுக்கு வேறுமார்க்கம் இல்லை. தெற்கிலே கடந்த ஆண்டு நடைபெற்ற 'அரகலய' போராட்டத்தின்போது சிறுகச்சிறுகச் சேர்ந்த கூட்டம் பெரும் திரளாக மாறியபோது பொலிஸார் இராணுவத்தினர் என்று எவராலும் எதுவும் செய்ய முடியாமல்போனது. இறுதியில் ஆட்சியாளர்கள் நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலைமைதான் ஏற்பட்டது. இதேபோன்றுதான் நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிராமல் போராட்டத்தில் இணைந்துகொள்ளவேண்டும். 'மற்றையவர்கள் பார்த்துக்கொள்வார்கள், மக்கள் பிரதிநிதிகள் பார்த்துக்கொள்வார்கள்' என்று ஒதுங்கிச்சென்றால் நாளை இந்த மண்ணில் வாழ்வதற்கே எமக்கு இடமிருக்காது. பௌத்த – சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்கு போராட்டம்தான் ஒரே தீர்வு. அந்த ஆக்கிரமிப்பு கறையான்போன்றது. மெல்லமெல்ல அரித்து ஒட்டுமொத்த தமிழர்தேசத்தையும் இல்லாதாக்கிவிடும். இந்த ஆபத்தை உணர்ந்து போராட்டத்தை ஆதரிக்கவேண்டும். வெறும் வாய்ச்சவாடல்களாக முகப்புத்தகத்திலும், சமூக ஊடகங்களிலும் 'கார்போர்ட் வீரர்களாக' மட்டும் பொங்கி எழுவதைவிடுத்து களத்திலுள்ளவர்களின் கரங்களைப் பலப்படுத்தவேண்டும்.

## நாளொரு நல்வார்த்தை

"பணத்தால் மகிழ்ச்சியை வாங்க முடியாது, ஆனால் அது நிச்சயமாக உங்களுக்கு சிறந்த நினைவுகளைக் கொடுக்கும்"

றொனால்ட் ரீகன்




# ஊடக சுதந்திர இடைவெளி இலங்கையில் மிகக்குறைவு

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மே 5**

**கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும், எதிர்ப்புப் போராட்டங்களையும், கேள்வி எழுப்புதலையும் சகித்துக்கொள்ள முடியாத அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளால் இலங்கையில் ஊடக சுதந்திரத்துக்கான இடைவெளி வெகுவாகச் சுருக்கமடைந்துள்ளது.**

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன்பத்திரண தெரிவித்துள்ளார்.

ஊடக சுதந்திர தினமான நேற்றுமுன்தினம் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஊடகங்களை அமைதிப்படுத்துவதற்காக சட்டங்களை முறைகேடாகவும், ஓர் ஆயுதமாகவும் பயன்படுத்துவது வழமையான விடயமாக மாறியுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணிபுரியும் சிறுபான்மையின ஊடகவியலாளர்கள் இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தகவல் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும், மனித உரிமைகளை வலுப்படுத்துவதற்கும் ஊடக சுதந்திரம் என்பது இன்றியமையாததாகும். 'ஊடகவியல் ஓர் குற்றமல்ல' - என்றார். (எ-இ)

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை அனைவரும் எதிர்க்கவேண்டும்!

## ஜே.வி.பி. அழைப்பு

கொழும்பு, மே 5

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதை அரசாங்கம் பிற்போட்டாலும் அந்தச் சட்டமூலத்தை எல்லோரும் சேர்ந்து எதிர்க்கவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் மூத்த உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் அரசாங்கத்திடம் இதைச் செய்யுங்கள் என்று அழுத்தம் கொடுக்கமுடியாது; செய்ய வேண்டாம் என்று கூறவும் முடியாது. அப்படியொரு சட்ட வரைவு இது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தும்போது அதற்கு மக்களின் எதிர்ப்பு வந்தால் அதைக் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் எங்களிடம் இருக்கின்றது என்று நாணய நிதியத்திடம் காட்டுவதற்காகவே அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்கின்றது.

இதை எல்லோரும் சேர்ந்து எதிர்க்கவேண்டும். தனக்கு ஆபத்து வரும்வரை எவரும் இருக்கக்கூடாது. மக்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் அது எல்லோருக்கும்தான். அதனால் எல்லோரும் ஒன்றிணைந்து இதை எதிர்க்கவேண்டும்.

சில சமூகச் செயற்பாட்டாளர்கள் சாப்பிடுவதற்கு மாத்திரமே வாய் திறக்கின்றார்கள். அவர்களுக்கென்று பிரச்சினை வரும்போது தான் சத்தம் போடுவார்கள்-என்றார். (எ-22)

**நாளை**

**06.05.2023**
**சனிக்கிழமை**
**சித்திரை 23**

சுபநேரம் : 02.56 - 04.26
ராகுகாலம் : 08.56 - 10.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீரணி நாகபூஷணி அ...
# சீரணி, சண்...
# ஆலய இரதோற்சவ ...
## இன்று (05.05.2023) ...




## மஹோற்சவ பிரதம குருக்களின் ஆசியுரை
## சீரணித்தாயின் சிங்காரப்பவனியிலே



மூவுலகும் தொழுதேத்தும் முப்பெரும் தேவியாவள் சித்திரத் தேரினிலே சித்திராப் பௌர்ணமி யின் சிங்காரமாய் பவனிவர காணக்கண் ஆயிரம் வேண்டும். அருவமும் உருவமாகி அநாதீயாய்-பலவாய் ஒன்றாய் கருணை பூத்த முகத்திளாய் சீரணியிப் பதியில் மேவி சித்திரை மஹோற்சவத்தின் பதினேழாம் திருநாளில் அன்புடன் பூஜைகள் அபிஷேகங்கள் அழகாய் அலங்காரம் செய்து முருகனும் முன்னவனும் முதலில் ஆடிவர பூவுலகை மாந்தரெல்லாம் அன்புடன் சேவித்தெழுவாதுலகும் சூரியனும் அழகாகக் பூச்சொரிய தேரோடும் நன் நாள் சிறப்பாக அமைந்துவிட நல்லாசிகள் பல பகிர்கின்றேன் வாழ்க.

**காசிலிங்கசர்மா குகானந்தக்குருகள்**
**தேவஸ்தான குரு, மஹோற்சவ குருக்கள் சீரணி.**

## இரதோற்சவ சிறப்பிதழ் வாழ்த்துக்கள்



சி.திசைவீரசிங்கம்

தேர் ஓடும் இன் நன் நாளில் ஞானத் தெய்வம் கௌரிபாலா சுவாமிகளின் ஆசியுடன் ரதோற்சவ சிறப்பிதழ் மலர வாழ்துத்கின்றோம். முக்காலமும் உணர்ந்த மெஞ்ஞானியால் எதிர்கால சிந்தனையுடன் வரையறை செய்யப் பட்ட உறுதி உரைகளை நாம் உதாசீனம் செய்ததால் கடந்த 12 வருடங்கள் ஆலயத்தின் செயற்பாடுகள் சிதைவடைந்தன கண்ணுற்றோம். யாவரும் நலம்பெற வேண்டும் என்கின்ற அடிகளாரின் ஞானசக்தி இன்று உயிர்ரோட்ட மாக எழுந்து ஏங்கும் பிரகாசிக்கின்றதை பார்த்து ஆனந்த மழையில் நனைந்து மகிழ்வுறும் யாவரும் தெய்வ திருமகள் எமக்கு தந்த அரிய பொக்கிசத்தை என்றும் பாதுகாப்பேம் என இன் நன்னாளில் உறுதி பூணுவோம் ஆக.

க.சற்குணராசா



சி. சிவகுருநாதன்

நல்லதையே சிந்திப்போம், நல்லனவே செய்வோம்
ஆலய தருமகர்த்தா சபை உறுப்பினர்கள்.

## தங்கரத தேரேறி....



சித்தர்கள் கூடி வாழும் சீரணியம் பதியினிலே
பக்தர்கள் புடைசூழ பவனி வரும் நாயகியே
முப்பொழுதும் நமைக்காக்க
முத்துரத சித்திரத் தேரேறி சொர்ப்பனமாய் வலம் வருவாள்
சுந்தரி எம் நாக பூசணியே....

இ.சிறிதரன் (தலைவர்)
சீரணி இந்து இளைஞர் மன்றம்

## இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்...


**மொடேன் மற்ஸ் அக்கடமி**
-சண்டிலிப்பாய்-
புதிய கல்வியாண்டு - 2023
தரம் - 03 – O/L , A/L வரை
(தமிழ் மொழி மூலம், ஆங்கில மொழிமூலம்) எல்லாப் பாடங்களுக்குமான வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.
T.P:077 817 5822
நிர்வாகி : B.Kuga
(கணித ஆசிரியர்)

**Yaso Textile**
Neliyady.

**ஐங்கரன் மோட்டோர்ஸ் மானிப்பாய்**
Authorized Dealers for Hero and Honda Spare Parts.
Authorized Distributors of CEAT TYERS in Jaffna.
Market View,
Jaffna Road, Manipay.
iynkaranmotors@gmail.com
Tel : 021 225 5150

**பத்மராஜன் அன் சன்**
நகைத் தொழிலகம்
**Pathmaraja & Son Jewellers**
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.
பிரதான வீதி, சங்கானை.
தொ.பே. 077 6002584

With Best Compiliment From:
**சக்தி எலக்ரிக்கல்ஸ்**
மின்சார, இலத்திரனியல் பொருட்களின் விற்பனை முதல்வன்
சந்தைச் சதுக்கம், சங்கானை.
தொ.பே 077 327 6397

**துர்க்கா மரக்காலை**
Dealers in Timbers of All kind of Furniture
Chavakacheri Road, Allayampathy
Seerani Junction
Sandilipay.
0777 114852

**லக்ஷ்மி புடைவையகம்**
**LUXMI TEXTILES**
No. 10,
Aalady Junction,
Manipay.
077 2391800

**தரன் கல்லூரி**
மருதடிச்சந்தி,
மானிப்பாய்.
தரம் 06 முதல் O/L A/L கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகள்
யாழ் முன்னனி ஆசிரியர்களால் நிகழ்த்தப்படுகிறது.

**சீரணி அம்பாள்**
மோட்டார் சைக்கிள் திருத்தகம்
சீரணி, சண்டிலிப்பாய்
Tel: 077 617 6572

**அம்பிகா ஐஸ்கிறீம்**
அளவெட்டி
-மேற்கு,
அளவெட்டி
Tel: 076 460 4398

**Golden Electrical**
All Kind of Electrical Needs
Keerimalai Road,
Sandilipay.
Tel : 077 405 6771

**சீரணி மகால்**
திருமண மண்டபம்
சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் தேவஸ்தானம்

# ண்டிலிப்பாய்

# வ சிறப்பிதழ் - 2023

## 3) வெள்ளிக்கிழமை






### பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



இலங்கையின் வடபகுதியிலே யாழ்ப்பாணத்திலே வலிதென்மேற்கு பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள தொன்மையும் வரலாற்றுப் பெருமையும் மிக்க அம்மன் ஆலயமாகிய சீரணி நாகபூசணிதாயின் தேர்த்திருவிழா சிறப்பு இதழிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

த்ஞ்சமென கெஞ்சுவோர்க்கு அபயமளித்து வேண்டுவோருக்கு வேண்டுவன செய்து அருளாட்சி புரிகின்ற நாகபூசணித்தாயின் மஹோற்சவம் கடந்த (19.04.2023) அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சித்திரைப் பூரணை நன்னாளாகிய இன்று தேரிலேறி அருள்மழை பொழியும் நிலைகண்டு பேறுபெறுவது எனும் தத்துவத்திற்கு அமைய நடைபெறுகின்றது.

உலகின் பலபாகங்களில் இருந்தும் அடியவர்கள் இவ்வாலயத்தில் நேர்த்திக்கடன் செய்து உயர்வடைவது கண்கூடு. மகாசக்தியாகிய தாயின் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுவதற்கும், அனைவருக்கும் அன்னையின் அருட்கடாட்சம் கிடைக்கவும் வேண்டி நிற்கின்றேன்.

அல்லல்படும் மக்களுக்கு ஆற்றுப்படுத்தி அருள்வழங்கும் ஆலயத்தின் அறங்காவலர் சபையினர்க்கும், தொண்டர்களுக்கும், பத்தகோடிகள் அனைவருக்கும் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து எல்லாம் வல்ல நாகபூசணித் தாயின் அருள் அனைவருக்கும் கிடைக்கப்பெற அன்னையை வேண்டிநிற்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**திருமதி யசோதா உதயகுமார்,**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், வலி. தென் மேற்கு, சண்டிலிப்பாய்.**

### வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வட புலத்தின் யாழ்ப்பாண மண்ணில் சண்டிலிப்பாய் கிராமத்தின் அடையாளமாக நிமிர்ந்து நிற்கும் சீரணி நாகபூசணி அம்மன் இரதோற்சவ திருவிழா நன்னாளில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகிறேன். வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மையும் அடியார்களுக்கு அள்ளி வழங்கும் தாய்மையுள்ளம் படைத்த நாகபூசணி அம்பாளின் அருளாசி உலகெங்கும் வாழும் இந்து மக்களுக்கு உரித்தாகட்டும். சித்திரை பௌர்ணமி நாளில் தேர்த்திருவிழா காணும் நாகபூசணி அம்மன் தீயவற்றை அழிக்கும் வகையில் கொடிய கொவிட் தொற்றிலிருந்தும் உலக மக்களை காப்பாற்றும் வண்ணம் வேண்டிநிற்கின்றோம்.

**கு.எழிற்செல்வன்**
**கிராம அலுவலர்,**
**J/143 சண்டிலிப்பாய் மேற்கு.**

வார்:

AMBAL
RICE MILL
அம்பாள்
அரிசி ஆலை
காரைநகர் வீதி,
சண்டிலிப்பாய்
Karainagar Road,
Sandilipay
T.P 072 7850550

மணி அன் ஈசன்
ஜுவெல்லறி
Mani & Easan
Jewellery
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்
T.P : 021 7912677,
076 256 5272
இல. 02, நவீன சந்தை,
பிரதான வீதி, சங்கானை.

ஸ்ரீநாகபூசணி
சைவ உணவகம்
சீராணி சந்தி
சண்டிலிப்பாய்.
T.P.: 076 103 8598

KIRUBA
MOTORS
கிருபா
மோட்டோஸ்
பிரான் பற்று வீதி,
சங்கானை.

கந்தசாமி
அன் சன்ஸ்
KANTHASAMI
& SONS
பலசரக்குப் பொருட்களை
மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்
பிரதான வீதி, சங்கானை.
Main Street, Chankanai.

லீலா
வெதுப்பகம்



பிரதான வீதி, சங்கானை.

தர்சினி
எரிபொருள்
நிலையம்
சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.

நியூ சண்முகானந்தா
ரெக்ஸ்ரைல்ஸ்
New Shanmugaanatha
Textiles
58, 23, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி.:
021 222 3356

தினேஸ்
வெதுப்பகம்
என்றும் ஒரேதரம்
POPPO
ICE Cream
Italian ICE

K Food Land
Seerani Junction,
Sandilipay
TP : 021 225 5140,
077 830 35408
Jaffna Casa
Hotel & Restaurant
AC, Non Ac Rooms



ஆலய பரிபாலன சபை
சீரணி நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதாந்த உதவிப் பணம் பெறலாம்

தென்மராட்சிப் பிரதேச பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவு பெறுவோருக்கான மே மாத கொடுப்பனவுகள் பிரதேச சமூக சேவைகள் அலகால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளன. கொடுப்பனவுகளை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

குறைந்த கட்டணத்தில், துப்பரவான முறையில் உழுந்து உடைத்துத் தரப்படும்.
**077 77 222 15**
(CS 24782)A-1

**The Royal College Of Jaffna**
தனியார் கல்வி நிறுவனம்
பிரான்பற்று வீதி, சங்கானை (பழைய மீன்சந்தை அருகில்)
6 ஆம் ஆண்டு மாணவர்களுக்குப் புதிய பிரிவு ஆரம்பமாகியுள்ளது.
சிறுகுழுக்களாகத் தனித்தனிக் கவனம் கொடுக்கப்படும்.
**077 675 1649** - நிர்வாகி

### Notice For Annual General Meeting 2023
### Jaffna Johnians Sports Club

The Annual General Meeting of Jaffna Johnians Sports Club will be held on Saturday, 20th May 2023 at 5.00pm at the College Staff Room.

Those who wish to submit resolutions please forward the same to the secretary on or befor 05.05.2023 to 16th May 2023.

**Secretary,**
**Jaffna Johnians Sports Club**
**St.John's College, Jaffna.**

(CS/24769)AH-1

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் வஸ்தியாம்பிள்ளை லூசியன் சுகேந்திரன் (சுகே / BASTI)

உரிமையாளர் - வஸ்தியன் அச்சகம், பழைய மாணவன் யா/ சென்.ஜோண்ஸ் கல்லூரி



**மண்ணில்**
**01.08.1960**

**விண்ணில்**
**05.05.2012**

ஒப்பற்ற பற்றுடன்
வாழ்வளித்த எம் உயிரே
நாள்தோறும் மகிழ்வளித்த
எங்களின் அப்பாவே

பண்பை கற்றுக்கொடுத்தீர்கள்
அன்பால் அரவணைப்பீர்கள்
பாசத்தின் உறைவிடமாய்
கண்ணிமைபோல் காத்தவர்
- நீங்கள்

எம் வாழ்வின் ஒளியாக
மிளிர்ந்த எம் அப்பாவே
காலமெல்லாம் தவிக்கவிட்டு
அப்பா எங்குதான் போய்விட்டீர்கள்

ஆண்டுகள் பதினொன்றாகிவிட்டாலும்
கண்ணீரோடு நாமின்றும்
எங்களின் இதயங்களில்
நீங்கள் தான் என்றென்றும்

ஆற்றமுடியா துயரம் எமக்கு
நேசம் வைத்த உங்கள் அன்புக்கு
ஏங்குகிறோம் என்றென்றும்
காலம் பல கடந்தாலும்
நினைவுகளில் நீங்கள் என்றென்றும்

**402, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

உங்கள் நினைவுகளில் என்றும் வாழும்
**குடும்பத்தினர்**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் சின்னத்தம்பி சிவராசா



"எம் இதயத்தில் குடிகொண்ட எம்
அன்பு பாசமலரே" அப்பா.....

**தோற்றம்**
**03.09.1952**

**மறைவு**
**05.04.2023**

புங்குடுதீவு மண்தனை
மகிழ்வுடனே கைப்பற்றி
பண்பையும் பாசத்தையும்
விதையாக்கி
ஆசையுடன் உரமூட்டி
அழகு செழிப்புடன்
வளத்தெடுத்தீர் இரு பெண்களை

சிந்தனைகள் சிலையாகி
தீர்மானம் ஒன்றாகி
வார்த்தை வரிகளால்
வாழ்க்கைப் பாடத்தை
பக்குவமாய் பரிந்துரைத்து
தலைநிமிர்ந்து நாம் வாழ
தந்தை பணி நீர் செய்தீர்

சங்கடங்கள் மத்தியிலும் சலிக்காது
உமக்காய் பணி செய்தோம்
நாம் ஒன்றாய் - ஆனாலும்
ஓயாத கரங்கள், குன்றாத மனவலிமை
அன்பான ஆறுதல் வரிகள்
ஆசை நிறைந்த தூய்மையான புன்னகை
இத்தனையும் நினைக்கையில்
கனக்கிறதே நெஞ்சம் அப்பா

காலத்தின் தேவையும்
கடவுளின் கட்டளையும்
அம்பாள் அடியில்
அன்னையுடன் அகமகிழ்ந்து
ஆனந்தமாக வாழ்வீர் - என
ஆறுதலடைகின்றோம் அப்பா

**உம் ஆத்மா சாந்தியடைய எம் அன்பு மலர்கள் காணிக்கை**

எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (05.05.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்புடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரை நாம் இழந்து தவித்த போது எமக்கு சகல வழிகளினாலும் உதவி புரிந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், வைத்தி யர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**18/2, விநாயகர் லேன்,**
**கொக்குவில் கிழக்கு**

**குடும்பத்தினர்.**

(CS/50315)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை(கொல்லங்கலட்டி)
## சபை நிதி - 2023

### வீதி விளக்குகளை கொள்வனவு செய்தல்

01. தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) வடமாகாணம் . தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு. வெற்றி பெறும் கேள்விதார்ர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்

04. தேவையான தகமைகள் கேள்வி ஆவணம் பகுதி 04 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Scehedule) பகுதி 05 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) தொலைபேசி:- 0212241130. தொலைநகல்:- 0212243688 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக வேலை நாட்களில் 08.05.2023ஆம் திகதியிலிருந்து 22.05.2023வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர். பெறுகைக் குழு. வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) எனும் இடத்திலிருந்து 08.05.2023ஆம் திகதியிலிருந்து 22.05.2023 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 4000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து த்லைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) எனும் முகவரிக்கு 22.05.2023 திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 30 (முப்பது- நாட்கள் 19.06.2023) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

09. கேள்வி தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவினால் எடுக்கப்படும்

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | NP/14/41(14) /05/CF/ S.Light 50W/01/ 2023 | வீதிவிளக்குகள் கொள்வனவுசெய்தல் (50WatsSingle Eye High Power COB LED Street Light) | 1.0 | 01 மாதம் | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் | 25,000.00 | 30.06.2023 |
| 02 | NP/14/41(14) /05/CF/ S.Light 30W/01/ 2023 | வீதிவிளக்குகள் கொள்வனவுசெய்தல் (30Wats Street Light Set) | 2.1 | 01 மாதம் | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் | 50,000.00 | 30.06.2023 |

**திரு.சு.சுதர்ஜன்**
**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை(கொல்லங்கலட்டி)**

**05.05.2023**

CR 39785 (N-1)

# திறந்த பல்கலையால் விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப் படும் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர்தரச் சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிப்போர் 18 வயதுக்கு மேற்பட்டவராக க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை https:ou.ac.lk//advesbm/ என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 15ஆம் திகதிவரை விண்ணப்பிக்கலாம்.

ஒருவருடகாலத்தை கொண்டமைந்த இந்தக் கற்கை நெறியை யாழ்.பிராந்திய நிலையத்தில் தமிழ் அல்லது ஆங்கிலமொழியில் தொடரமுடியும்.

கற்கைநெறியைப் பூர்த்தி செய்பவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவப் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய பிறவுண்வீதி, கொக்குவில் எனும் முகவரி யூடாகவோ அல்லது 021 222 3374 தொலைபேசியூடாகவோ தொடர்புகொண்டு பெறலாம் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி




## அமரர் தியாகராசா சசிக்குமார்
திதி: 05.05.2023

எங்கள் இல்லத்தின் ஒளிவிளக்கே
நிஜம் ஒன்று நிழலாய் மாறி
கண்முன்னே வாழ்ந்து கனவாகி
ஆண்டுகள் எட்டு ஆனபோதும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்!

உங்கள் பிரிவாலும் துயரத்தாலும் வாடும்

அப்பா (தியாகராசா) அம்மா (புஸ்பராணி)
தம்பிமார்கள் (மதனமோகன், பிரதீபன்,ஜெயரூபன்)
தங்கைகள் (சுஜாத்தா, சியாமளா)
மச்சாள்கள் (சுதர்ஷினி, துளசி)
மச்சான்கள் (கரன், யசிகரன்)
பெரியப்பா (டிசாந், யனுசியன், சசித்)
மருமகன் (அக்ஷயன், அவந்தியன்)
மருமகள் (தூபிகா)

46, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(cs.43185) (2.6)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
26
06
1956



உதிர்வு
26
04
2021

## அமரர் திருமதி ஏகாம்பரம் நாகேஸ்வரி
திதி-சித்திராப் பௌர்ணமி

அன்புக்கு இலக்கணமாய் வாழ்ந்தீர்கள்
அரவணைப்பின்றி துயருறுகின்றோம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் இதயத்தில் நீங்கள் தான் அம்மா!!!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குடும்பத்தினர்.

குடமியன், வரணி.

(CR 39787...)

## உயிர் காக்கும் உன்னத பணியாம்
## இரத்ததானம் செய்வதால் பயன்பெறுவோம்




அண்மையில் எமது யாழ் போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கி இரத்தம் வழங்குவதில் சந்தித்துள்ள நெருக்கடிகளுக்கு கைகொடுத்து உதவும் முகமாக எமது வைத்தியசாலை ஊழியர்கள் அனைவரும் இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்குவதற்கு முன்வந்துள்ள நிலையில் சனிக்கிழமை அன்று எமது வீனஸ் விசேட வைத்தியசாலையில் இரத்ததான முகாமானது யாழ் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி அனுசரணையுடன் நடத்த உள்ளோம். அந்நாளில் யாழ் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்க விரும்புவோர் எமது வைத்தியசாலையில் இடம்பெறும் இரத்ததான முகாமில் பங்குபற்றி தாங்களும் இரத்த கொடையாளர்கள் ஆகுங்கள்.

**மனித குலத்துக்கு செய்யும் சேவை கடவுளுக்கு செய்யும் சேவைக்கு ஒப்பாகும்.**

**Services to mankind is service to god**

AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2021/2022**

**Bachelor of Business Management Degree Programme - 2021/2022**

**புதிய அனுமதி - 2023**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடாத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருட கால வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள் :**

க.பொ.த. (உ/த) பரீட்சை 2020 அல்லது அதற்கு முன்னர் எப்பாடப் பிரிவில் இருந்தாயினும் சித்தியடைந்திருப்பதுடன் பொது அறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% ஆன புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

**முக்கிய குறிப்பு :**

இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் உள்வாரியாக பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல் :**

யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தினை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை)

அல்லது

www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

 விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000.00 இனை 05013215001410 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி, பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் நேரடியாக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்கலாம்.

அல்லது

உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு - 2021/2022" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு:** விண்ணப்பப்படிவத்துடன் க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழின் பிரதியினையும் இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 31.05.2023 (புதன்கிழமை)**
**(விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)**


**மேலதிக விபரங்களுக்கு : 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.**

**பதிவாளர்**
**03.05.2023**

(CR/39783)AH-1

## அழைப்பு

## 31ம் நாள் நினைவேந்தலும் வீட்டு வழிபாடுகளும்



**தோற்றம்**
**25.08.1946**

**மறைவு**
**06.04.2023**

அன்புடையீர் கடந்த 06.04.2023 அன்று திருநிலையடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர்**

## இராசகுலசூரியர் சிங்கமாப்பாணர்

அவர்களின் 31ம் நாள் நினைவேந்தலும் வீட்டு வழிபாடுகளும் 162, காங்கேசன்துறை வீதி சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் 06.05.2023 அன்று இடம்பெறவுள்ளது.

எமது குடும்பத்தலைவரின் பிரிவையிட்டு எம் துயரில் பங்குகொண்ட, அஞ்சலி செலுத்திய, தொலைபேசி, சமூக வலைத்தளங்களினூடாக ஆறுதல் கூறிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு, 06.05.2023 அன்று இடம்பெறவுள்ள நினைவேந்தல், வீட்டு வழிபாடுகளிலும், மதிய விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**+94779231747** **குடும்பத்தினர்.**
**162, காங்கேசன்துறை வீதி,**
**சுன்னாகம்.**

(CR 39788) A-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 03 - 12 - 1932

**மறைவு** 16 - 04 - 2022

## அமரர் பொன்னு இராசையா

(கோல்டன் இராசையா - பிரபல தொழில் அதிபர்)

உடல் வருத்தம் பாராத
உண்மை உழைப்பின் உதாரணம்!...
உயரத்தில் நீ இருந்தாலும்
உயிர் உள்ளவரை உன் நினைவில் நாங்கள்!

கண்ணுக்கு ஒளியாய் நெஞ்சத்தில் நினைவாய்
நிலையாய் என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய் - என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகின்றோம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*நீங்காத நினைவுகளுடன்....*

**மாரியம்மன் வீதி,** **மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**திருநெல்வேலி.** **பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(CS 24774)AH-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**தோற்றம்** 15 . 04 . 1957

**மறைவு** 05 . 04 . 2023

கடந்த (05.04.2023) புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் கதிரவேலு தவராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (03.05.2023) புதன்கிழமை காலை 6.30 மணியள வில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. அத்துடன் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நாளை (06.05.2023) சனிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் தொலைபேசி ஊடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், பதாகைகள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சங்கத்தை வீதி,**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

**குடும்பத்தினர்**
**077 501 6213, 076 622 0735**

(CS 50296) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதியான...

தையிட்டி திஸ்ஸ விகாரை சட்டத்துக்குப் புறம்பான வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அது உடனடியாக அகற்றப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் திஸ்ஸ விகாரைக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் மாலை போராட்டம் நடத்தப்பட்டது. இதன்போது இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு விகாரைப் பகுதிக்குள் எவரும் உட்செல்ல முடியாதவாறும், உட்சென்றவர்கள் வெளிவர முடியாதவாறும் வீதிமறியல் போடப்பட்டது. இதனால், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட குழுவினர் வீதிமறியலுக்குள் அகப்பட்டனர். அவர்களுக்கு உணவுகளோ அல்லது மருந்துகளோ வழங்கமுடியாத நிலையும் ஏற்பட்டது.

அதனையடுத்து நேற்றுக் காலை மருந்துப் பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களை உள்ளே கொண்டு செல்ல முயற்சித்த ஐவரை பலாலி பொலிஸார் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இந்த நிலையில் கைது செய்யப்பட்டவர்களுக்காக சட்டத்தரணி சுகாஷ் நீதிமன்றத்தில் ஆஜரானார். இதன்போது அவர்கள் ஐவரையும் மல்லாகம் நீதிமன்றம் பிணையில் விடுவித்தது. பின்னர் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் சம்பவ இடத்துக்கு வருகை தந்து நிலைமையை ஆராய்ந்தார். அதன்பின்னர் விகாரைக்கு முன்னால் உள்ள காணியில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபடலாம், வெசாக் தினத்துக்கு வழிபாடு செய்வதற்கு வருபவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்று நீதிவான் தெரிவித்தார். இதையடுத்து வீதி மறியலுக்கு வெளியே நின்று போராடியவர்கள் உட்சென்று அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-ம-26,125)

## தையிட்டி விவகாரம்...

ஆலோசனை வழங்கினார். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சிறீதரன், சித்தார்த்தன், அங்கஜன் மற்றும் வடக்கு மாகாணசபைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர். அதனைத்தொடர்ந்து தையிட்டி விவகாரம் தொடர்பில் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் சம்பவம் தொடர்பில் வினவினார்.

இதன்போது பிரதிப் பொலிஸ்மா அதிபர், தையிட்டியில் போராட்டக்காரர்கள் யாரையும் தாக்கவில்லை என்று குறிப்பிட்டார், ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவரான வடக்கு மாகாண ஆளுநர், தையிட்டிச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடுங்கள். நீதிபதியை அங்கு அழைத்துச் செல்வது பொருத்தமானதாக இருக்கும். இந்த விடயத்தை அவ்வாறுதான் தீர்க்கமுடியும் என்று குறிப்பிட்டார். (அ-ஒ.5)

## படையினர்...

என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச்செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராகப் போராட்டம் நடத்துவது தொடர்பில் இன்று (நேற்று) காலை ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கூறியபோதுதான் அறிந்துகொண்டேன். அந்த விகாரை தொடர்பில் முழுமையான தகவலை அறியாமல் நான் கருத்துச் சொல்லமுடியாது. அந்த விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி பிரதேச செயலர் கூட்டத்தில் தெரிவித்தார். அது தொடர்பில் அவரிடம் அறிக்கை கோரியுள்ளேன். படையினர் தாம் தங்கியுள்ள இடத்தில் தமது வழிபாட்டுக்காக விகாரை அமைக்கலாம். வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பல இடங்களில் அவ்வாறு அவர்கள் அமைத்த வழிபாட்டிடங்கள் அநாதரவாக உள்ளன' என்று அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார். (அ-ஒ.5)

## ஒருங்கிணைப்புக்...

செய்தனர். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 2 ஆண்டுகளின் பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று இடம்பெற்றது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தனக்கு அருகில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கூட்டத்துக்கு வருகை தராமை தொடர்பில் தெரிவிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

'இன்று (நேற்று) காலையில் கஜேந்திரனை நேரில் சென்று பார்வையிட்டேன். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். அவரைப் பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர். இவ்வாறானதோர் நிலைமையில் நாம் இந்தக் கூட்டத்தில் தொடர்ந்து பங்கேற்கமுடியாது. நாம் வெளிநடப்புச் செய்கின்றோம்' என்று சுமந்திரன் தெரிவித்தார். அவரைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சித்தார்த்தன் ஆகியோரும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும் வெளியேறினர்.

இதன்போது கூட்டத்தில் பங்கேற்றிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்துக்கு தான் எதிர்ப்பில்லை என்றும், எனினும் வலி. வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவராக இருக்கும்போது குறித்த விகாரை கட்டுமானத்தை இடைநிறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் அதனை மீறி அது அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தானும் வெளியேறுவதாகக் குறிப்பிட்டார். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலிருந்து வெளியேறிய 5 பேரும் தையிட்டியில் போராட்டம் நடைபெறும் இடத்துக்குச் சென்றனர். (அ,ஒ,5)

## உணவுகள்,...

ஈடுபட்டவர்களை தூற்றிச் சென்றனர்.

தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரி நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நேற்றையதினம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அங்கஜன் இந்த சட்டவிரோதக் கட்டுமானத்துக்கு இடமளிக்காத பட்சத்தில் அதை கட்டியமை தவறு என்று தெரிவித்து வெளிநடப்புச் செய்து போராட்டக் களத்துக்குச் சென்றார். அவர் தண்ணீர், நீராகாரங்கள், உணவுகள் என்பவற்றையும் போராட்டத்தில் ஈடுபடுவோருக்காக தன்னுடன் கொண்டு சென்றார்.

இந்த நிலையில் அங்கஜனின் வருகைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட பலர் குரலெழுப்பினர். ஏனைய மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராகவும் அவர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். இதனால் அந்தப் பகுதியில் சலசலப்பு ஏற்பட்டது. அத்துடன் அங்கஜன் சென்ற பின்னர் அவர் வழங்கிய தண்ணீர், உணவுகள், நீராகாரங்கள் என்பவற்றை போராட்டத்தில் ஈடுபட்ட சிலர் தூக்கியெறிந்து அநாகரிகமாக நடந்துகொண்டனர்.

உணவுப் பொருள்கள் வீசப்பட்டமைக்கு அங்கிருந்த பலரும் விசனம் தெரிவித்தனர். 'ஒரு போராட்டத்தை நேர்த்தியாகவும் ஒற்றுமையாகவும் முன்னெடுக்க முடியாத இவர்கள் போராட்டத்தில் ஈடுபடத் தகுதியற்றவர்கள். ஒற்றுமையாக பொதுக்குரலில் போராடும்போதே அதற்குப் பயன்கிட்டும். எமக்குள் இவ்வாறு பிளவுபட்டு போராடிப் பயனில்லை' என்று பொதுமக்கள் பலர் அதிருப்தி தெரிவித்தனர். இந்த உணவுகள் வேண்டாம் என்றால் அவற்றை அங்கஜனிடமே திருப்பிக் கொடுத்திருக்கலாம். உணவு இன்றி இன்று பலரும் அல்லாடும் நிலையில் இந்தச் செயல் எவ்வகையில் ஏற்புடையதாகும் என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். (ம-26)

## தையிட்டி விகாரை...

இதனையடுத்து விகாரையை அகற்றி தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விகாரை அடுத்த மாதம் 3ஆம் திகதி பொசனன்று திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ.5)

## இறுதி...

என்றும் அதில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் தமிழ்த் தேசியப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியப் பேரவையால் நேற்று மாலை அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நேற்று (நேற்றுமுன்தினம்) புதன்கிழமை மாலை ஆரம்பித்த இந்தப் போராட்டம் இரவு பகலாக தற்போது இடம்பெற்று வருகின்றது. இந்தப் போராட்டத்தை தடைசெய்வதற்கான உத்தரவைக் கோரி நீதிமன்றுக்குச் சென்ற பொலிஸார் நீதிமன்றத்தில் பொய்களைத் தெரிவித்து நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்த முனைந்தனர். எனினும் தையிட்டி மக்கள் சார்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகிய சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஷ் மற்றும் சட்டத்தரணி க.மகிந்தன் ஆகியோர் மக்கள் தரப்பு நியாயங்களை முன்வைத்ததன் அடிப்படையில் மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி குறித்த போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு நேரில் வந்து களநிலைவரத்தை ஆராய்ந்தார். விகாரையின் முகப்பிலோ அல்லது பாதையிலோ தடைகளை ஏற்படுத்தாதும், வழிபாட்டுக்கு வரும் மக்களுக்கோ, விகாரையில் இடம்பெறும் உற்சவத்துக்கோ இடையூறு ஏற்படுத்தாமலும், அமைதிக்குப் பங்கம் விளைவிக்காமலும் ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்தலாம் என்று அனுமதியளித்துள்ளார்.

அதன் பிரகாரம் நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்ட வகையில் அமைதியான முறையில் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தப் போராட்டம் நாளை (இன்று) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிவரை முன்னெடுக்கப்படும். பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஒட்டுமொத்த தமிழினமும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பினை வெளிப்படுத்தினாலே இவ்வாறான ஆக்கிரமிப்புகளைக் கட்டுப்படுத்தவும், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கவும், அத்துமீறிக் கட்டப்பட்ட விகாரையை அப்புறப்படுத்தவும் முடியும். தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அனைவரும் இன்று காலை 8.30 மணிமுதல் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு முன்பாகவுள்ள தனியார் காணியில் இடம்பெறும் போராட்டத்தில் கலந்துகொண்டு போராட்டத்தின் கனதித்தன்மையைப் பலப்படுத்துமாறு அழைக்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம-125,26)

## நடமாடினால்...

போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பார்த்து பொலிஸார் மிரட்டல் விடுத்தனர்.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் விகாரைக்கு வருபவர்களுக்கு இடையூறு இல்லாமல் போராட்டத்தை முன்னெடுக்கும்படி நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. இந்த நிலையில் விகாரைப் பகுதிக்கு முன்பாக நடந்து திரிந்தால் அது நீதிமன்றின் உத்தரவை மீறும் செயல் என்றும் உடன் கைதுசெய்யப்படுவீர்கள் என்றும் பொலிஸார் நேற்று இரவு போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பார்த்துத் தெரிவித்துள்ளனர். இதையடுத்து, 'நீதிமன்றத்தின் உத்தரவு என்ன என்பதை அறியாதவர்களாக பொலிஸார் உள்ளனர். நடமாடித்திரிவது ஒருபோதும் நீதிமன்ற உத்தரவை மீறும் செயல் ஆகாது. எனின் போராட்டக் களத்துக்கு வருவதற்கு ஒரு ஹெலிகொப்டரை ஏற்பாடு செய்து தாருங்கள்' என்று சட்டத்தரணியும் முன்னணியின் ஊடகப் பேச்சாளருமான சுகாஷ் பதிலடி கொடுத்தார். (அ-ம-125,26)

## விடைத்தாள்கள்...

ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விடைத்தாள்கள் திருத்துவதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு அதிகரிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் ஆசிரியர்கள் அண்மைக்காலமாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். இதனால், விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் கிடப்பில் போடப்பட்டு வந்தன. இதற்குப் பல தரப்பிலிருந்தும் கண்டனங்கள் குவிந்தன. இதனால், கல்வித்துறையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்க ஜனாதிபதி ரணில் பரிசீலனைகளை மேற்கொண்டார். இதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் ஆதரவு தெரிவிக்கப்பட்டது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே தற்போது போராட்டம் கைவிடப்பட்டு விடைத்தாள் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'மாணவர்களின் நன்மை கருதியே தாங்கள் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம். இது ஒரு தற்காலிக ஏற்பாடு. தற்போது பதவியில் உள்ள ஜனாதிபதியிடம் போராடி எமது கோரிக்கைகளை வெல்ல முடியாது' என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்க பேச்சாளரான சிரேஷ்ட விரிவுரையாளர் சருடத்தே இலங்கசிங்க தெரிவித்துள்ளார். (அ-ம-6)

## மூச்செடுக்க...

சிரமப்பட்ட அவர், இருமலாலும் பாதிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்று மாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று இரவு உயிரிழந்தார். நிறைமாதக் கர்ப்பிணியான அவருடைய வயிற்றிலிருந்து அறுவைச்சிகிச்சை மூலம் குழந்தை உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனைகள் இன்றையதினம் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ம-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பார்வைக்காக வட்டார எல்லை விவரம்!

சாவகச்சேரி, மே 5

சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் வட்டார எல்லை விவரங்கள் எல்லை நிர்ணயக் குழுவால் அறிவிக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சாவகச்சேரி நகரசபையில் முன்னர் சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு கடல், கோயிற்குடியிருப்பு தரை, சங்கத்தானை, சாவகச்சேரி வடக்கு, மண்டுவில், மீசாலை மேற்கு, மீசாலை கிழக்கு, கல்வயல், நுணாவில் மத்தி - கிழக்கு, நுணாவில் மேற்கு என 11 வட்டாரங்கள் இருந்தன. எல்லை நிர்ணயத்தின் பின்னர் கல்வயல் மண்டுவில், நுணாவில், சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை, மீசாலை என ஆறு வட்டாரங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேசசபை தற்போது சர சாலை, மட்டுவில், கைதடி, கொடிகாமம், மிருசுவில், வரணி, மந்துவில், நாவற்குழி, மறவன்புலவு, கச்சாய் என பத்து வட்டாரங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த எமிரேட்ஸூடன் உடன்படிக்கை

கொழும்பு, மே 5

இலங்கையை, சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த இடமாக மேம்படுத்துவதற்காக எமிரேட்ஸுடன் உடன்படிக்கையொன்றில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

துபாயில் இலங்கை சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் எமிரேட்ஸ் பிரதம வர்த்தக அதிகாரி அட்னான் காசிம் ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்வில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எமிரேட்ஸ் தனது உலகளாவிய வலையமைப்பின் ஊடாக இலங்கையை மேம்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தம் உதவும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்ததாவது:

அழகிய கடற்கரைகள், பசுமையான மழைக் காடுகள் மற்றும் வளமான கலாசாரம் மற்றும் வரலாறு ஆகியவற்றுக்குப் பெயர் பெற்ற இலங்கை ஒரு பிரபலமான சுற்றுலாத் தலமாகும்.

2019 இல் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகளில் இருந்து நாடு மீண்டு வருகிறது. மேலும் சுற்றுலாத் துறை மெதுவாக இயல்பு நிலைக்குத் திரும்புகிறது. எமிரேட்ஸ் உடனான கூட்டாண்மை, சுற்றுலாத் துறைக்கு ஒரு பெரிய ஊக்கமாக உள்ளது. இது வரும் ஆண்டுகளில் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க இலங்கைக்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (எ-இ)


## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)

பார்வையிடும் நேரம் :
காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:-076 755 8606 077 638 5683


# கைதிகளைச் சந்திக்க விசேட சந்தர்ப்பம்!

கொழும்பு, மே 5

வெசாக் தினத்தை முன்னிட்டு சிறைக் கைதிகளை சந்திப்பதற்கு, அவர்களது உறவினர்களுக்கு இரண்டு நாள்கள் விசேட சந்தர்ப்பமொன்றை வழங்குவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

சிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இன்றும், நாளையும் இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உறவினர்கள் அவர்கள் கொண்டு வரும் உணவு மற்றும் இனிப்புகளை பொதிகளை கைதிகளுக்கு வழங்க முடியும். சிறைச்சாலை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி முறையான சுகாதார மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளின் கீழ் பார்வையாளர்கள் கைதிகளை சந்திக்க வேண்டும்.

நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் இந்த விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (எ-இ)


## Efly Jaffna Pvt LTD

**Vacant Wanted**

Air Line Ticketing Exprience
1) Ticketing Basic Experience
2) English Skills
3) Spoken English AS Well

Contact No. Watsapp
004179 1060 606
E-mail Address-info@efly.ch

## காசாளர், கணக்காய்வாளர் உடன் தேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரபல நிறுவனமொன்றிற்கு, காசாளர் மற்றும் கணக்காய்வாளர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:
076 765 4481

(CS 22379A-1)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் புத்தக விற்பனை நிலையத்திற்கும், ஹாட்வெயர் விற்பனை நிலையத்திற்கும்.

1) விற்பனை பிரதிநிதி - (ஆண்/பெண்)
2) உதவியாளர் - (ஆண்/பெண்)

தேவை.

T.P: 077 4949 683,077 077 6469

(CS 24781A-1)

## தேவை

கொழும்பில் இருக்கும் சைவ உணவு உண்ணும் வயோதிபருக்குத் துணையாக இருப்பதற்கு ஒரு பொறுப்பும் இல்லாத ஆண் ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். விருப்பமானவர்கள் கீழ்க்காணும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

077 921 3556

(CS/50305)AH-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A-9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

## மணப்பெண் தேவை

01. பளை, இந்து, கௌரவகுலம் (V), 1984, அவிட்டம், Phd, Divorce, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
02. காரைநகர், இந்து, கௌரவகுலம் (V), 1992, மகம், Software Engneer, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
03. சுன்னாகம் - சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம் (K), 1996, மிருகசீரிடம், Bachelor of Engneering, Software Engineer, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
04. நெல்லியடி - பொலிகண்டி, இந்து, கௌரவகுலம் (V), 1990, மகம், Bachelor of Engineering, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
05. வட்டுக்கோட்டை, இந்து, கௌரவகுலம் (V), 1977, புனர்பூசம், Business Managment Degree, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
06. புலோலி - தெல்லிப்பழை, இந்து, கௌரவகுலம் (V), 1989, அனுசம், LLB Lawyer, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
07. சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம் (V), 1992, சதயம், MBBS Doctor, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
08. புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம் (V), 1989, சுவாதி, MSc Engineer, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
09. கோப்பாய், இந்து, கௌரவகுலம் (V), 1984, சதயம், MBBS, Doctor, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

(CS/50311)AH-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.